நாள்: 10.01.2025

SC.113/2021
பெயர் அரசன்
அ.சா.5

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் கம்பம் பேருந்து நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் போடும்போது பேருந்து நிலையத்தில் வேறு நபர்களும் இருந்தார்கள். நான் கையெழுத்து செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னால் எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னைத்தவிர வேறு நபர்கள் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை.

நாள்: 10.01.2025

SC.113/2021
பெயர் வைரமுத்து
அ.சா.8

**குறுக்கு விசாரணை**

என் முன்பாக என்ன பொருள் எடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையெழுத்து செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னைத்தவிர வேறு நபர்கள் யாரும் சாட்சி கையொப்பம் போட்டார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் ஞாபகம் இல்லை.